# யாழ்ப்பாணத்து வீரசைவர்



த. சண்முகசுந்தரம்

# யாழ்ப்பாணத்து வீரசைவர்

★

த. சண்முகசுந்தரம்

★

வெளியீடு :
அருள் வெளியீட்டகம்,
மாவைக் கந்தசாமி கோயிலடி,
தெல்லிப்பழை,
இலங்கை.
15-10-83.

அச்சுப்பதிவு :
மஹாத்மா அச்சகம்,
ஏழாலை மேற்கு,
ஏழாலை,
இலங்கை.

விலை ரூபா ஐந்து

எல்லா உரிமையும்
ஆக்கியோனுக்கே

# முன்னுரை

ஈழத்துத் தமிழகவியல்பற்றிய ஆய்வு இன்று தேவை; இது இன்றியமையாதது. ''யாழ்ப்பாணத்து இசை வேளாளர்'' என்ற நூலினை முன்னர் அச்சிட்டேன். அதனைத் தொடர்ந்து ''யாழ்ப்பாணத்து வீரசைவர்'' என்ற இந்த நூலினை வெளியிடுகின்றேன். ''யாழ்ப்பாணத்து வீரசைவர் யார் எவர்'' என்ற கலைஞர் பட்டியலும் விரைவில் வெளியிடவேண்டியது.

இந்தநூலை விரைந்து அழகாக அச்சிட்டுத்தந்த ஏழாலை மஹாத்மா அச்சகத்தாருக்கு என் உளப்பூர்வமான நன்றி.

த. சண்முகசுந்தரம்

* * * * * * * *

## The Veerasaivar of Jaffna

*By*

**T. Sanmugasuntharam**, B. A. (Cey.), Dip-in-Ed. (Cey.)

**Publishers :**

**ARUL VELIETAKKAM,**
Mavai Kanthasamy Kovilady,
TELLIPPALAI.
Sri Lanka.
15-10-83.

**Printers :**

**MAHATHMA PRINTING WORKS**
EARLALAI WEST,
EARLALAI.
Sri Lanka.

**Price : Rs. 5/-**

**All Rights Reserved**

# யாழ்ப்பாணத்து வீரசைவர்

சிவவழிபாடு மிகவும் பழமைவாய்ந்தது. இதற்கென மரபு பலவும் உண்டு. இந்தப் பழம்பெரும் மரபை மறவாதவர் யாழ்ப்பாணத்து வீரசைவர். யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற சாதிக் கட்டுப்பாடு மிகவும் இறுக்கமானது. இதனால் யாழ்ப்பாணத்து வீரசைவர் இன்று கோட்பாடு ஒன்றைப் பின்பற்றுபவர் என்பதிலும்பார்க்க ஒரு குலத்தவர் என்ற கருத்து வளர்ந்து வலுப்பெற்றுவிட்டது. வீரசைவர் இன்று ஈழத்தில் யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை, மலையகம் என்னும் பகுதிகளில் பரவலாக வாழ்கின்றனர். இவர்களின் மூதாதையர் காலத்துக்குக்காலம் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர். இவர்களில் பெரும்பாலானவர் தமிழ்நாட்டிலிருந்து இங்கு வந்தனர் எனக் கொள்வதே பொருத்தம். இக் குலத்தவர் சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியது. இத் தொண்டு இன்னும் விரிவாக ஆராயப்படவில்லை.| இவர்களின் மதத் தொண்டு, தமிழ்த்தொண்டு, கலைத்தொண்டு என்பன விரிவாக ஆராயப்படவேண்டியவை. யாழ்ப்பாணத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வேதாகம அலை ஒன்று வீசியது. அதன் பயனாக வீரசைவரின் தொண்டு மறைக்கப்பட்டது. பார்ப்பனர் வளர்க்கின்ற இந்துமத வழிபாடு உயர்ந்தது; ஏனைய வழிபாட்டுமுறை யாவும் குறைநிரம்பியவை என்ற ஓர் எண்ணம் வேர் ஊன்றிவிட்டது.

சைவமத மரபுகள் இன்று குழப்பமடைந்து மாறுகின்றன. காலதேவனின் தாக்கம் ஒருபுறம். மற்றொரு புறத்தே அறியாமையின் தாக்கம். சைவத்தின் கோட்பாடுகளை நன்கு விளங்காத ஒருசாரார் தாம் சைவத்தைப் பின்பற்றுபவர் எனக் கூறுவர்; கூறிக்கொண்டு இந்துமதம் என்னும் ஒரு கோட்பாட்டை வளர்க்கின்றனர். ஆதிசங்கரர் வளர்த்த ஆறுவழி அதாவது "சண்மார்க்கம்" என்ற கோட்பாட்டைப் பின்பற்றுகின்றனர். அதுமட்டன்று "எம்மதமும் சம்மதம்"

என்ற கருத்தையும் பரப்புகின்றனர். எம்மதமும் சம்மதம் என்ற கருத்து இவருக்கு விளங்குவதில்லை. ஒருவன் ஒரு நேரத்தில் ஒருவழியில்தான் செல்லலாம். பலவழியிலும் செல்லமுடியாது. அப்படிச் செல்வது ''அங்காடி நாயின்'' கதையாகமுடியும். ஏனையோரின் கருத்திற்கு, நம்பிக்கைக்கு மதிப்புக் கொடுப்பது அறம்; உயர்ந்தபண்பு; சீரிய நோக்கம். ஆனால் தன்வழியை, தன்வீட்டை நன்கு பேணி வைத்திருக்க முடியாத ஒருவன் மற்றவனின் வீட்டின் அழகைச் சுவைப்பதும் அவனின் வழி எனக்குத் தெரியும் எனக் கூறுவதும் கேலிக்கூத்து. தமிழில் உள்ளவை எல்லாம் குறைந்தவை என்ற போலிக் கருத்தை வளர்க்கின்றனர் ஒருசாரார். திருமுறை ஓதுவதற்கும் கட்டுப்பாடு வைக்க முயலுகின்றனர்.2 கிராமியக்கலைகளை இவர்கள் எள்ளி நகையாடுகின்றனர். சாதிக்கட்டுப்பாட்டை நிலைநாட்ட மறைமுகமாக முயலுகின்றனர். முன்னர் ''யாழ்ப்பாணத்து இசை வேளாளர்'' என்ற ஆய்வினை மேற்கொண்டேன்.3 வீரசைவர் மூவர் கலைத்தொண்டை அவரின் நேர்முக உரைத்தொகுப்பு மூலம் விளக்கினேன்.4 அதன் தொடர்ச்சியாக இந்தச் சிறிய ஆய்விலே ஈடுபடுகின்றேன்.

யாழ்ப்பாணத்து வீரசைவரின் சைவத்தொண்டு, தமிழ்த் தொண்டு, கலைத்தொண்டு என்பவை மிகப்பெரியவை. பண்ணிசையை வளர்த்தவர் வீரசைவர். திருமுறைகளை வீதியெல்லாம் முழக்கியவர் வீரசைவர். கரகம், காவடி, கூத்து, உடுக்கடிப்பாட்டு என்பவற்றை வளர்த்தவர் இக்குலத்தவர். தெய்வீகக் கலையாம் சோடினை, சப்பரம், காவடி கட்டுதல், மணவறை வைத்தல் ஆகியவற்றைச் செய்பவர் வீரசைவர். கிராமக் கோயில்களில் பூசாரிமாராக இருந்து இவர் செய்கின்ற தொண்டு அளப்பரியது. பொதுமக்களின் அன்னதானம் போன்றவற்றை நின்று நடத்துபவர் வீரசைவப் பூசாரிமார். சுருங்கச் சொன்னால் பொதுமக்களுடன் சேர்ந்து வாழ்ந்து ஒட்டி உறவாடி உதவுபவர் வீரசைவர்.

யாழ்ப்பாணத்து வீரசைவரைப் பொதுமக்கள் ''பண்டாரம்'' என அழைப்பர். பண்டாரம் என்றசொல் மிகவும்

உயர்ந்த பொருளில் வருவது. இது வடமொழியில் இருந்து வந்த சொல். பண்டாரம் என்ற சொல்லின் பல்வேறு பொருளைக் கவனிப்போம்.

| | | |
|---|---|---|
| பண்டாரம் | — | அரசன். யாழ்ப்பாணத்தரசன் சங்கிலி பண்டாரம் என்ற பெயரைத் தாங்கியவன்.5 |
| பண்டாரம் | — | அரசாங்கம் |
| பண்டாரி | — | உடையார் சாதி |
| பண்டாரவீதி | — | அரசவீதி (யாழ்ப்பாணவழக்கு) |
| பண்டாரக்குளம் | — | யாழ்ப்பாண இடப்பெயர் |
| பண்டார மேளம் | — | இராசவிளம்பரத்தின் போது ஒலிப்பது |
| பண்டார சன்னிதி | — | சைவமதத் தலைமைத் துறவி |
| பண்டார சாத்திரம் | — | திருவாவடுதுறை ஆதீனத் துறவிகள் இயற்றிய சைவசித் தாந்த நூல்கள். |
| பண்டார வாரியம் | — | கோயில் நிர்வாகக்குழு |

சென்னைப் பேரகராதி–
தொகுதி 4, பக்கம் 425

பண்டாரம் என்போன் எம்பெருமானுக்குப் பணிவிடை செய்வோன் என்றபொருளில் ''யாழ்ப்பாண வைபவ மாலை''யில் வருகிறது.6 ''கந்தசாமி கோயிற் பணிவிடைக் காரனாக இருந்த சங்கிலிபண்டாரம்'' என்பதை நோக்க லாம்.5

யாழ்ப்பாணத்தரசனுக்குப் பண்டாரம் என்ற பெயர் வந்ததற்குப் பல விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தரசை ஆண்ட கடைசி மன்னன் சங்கிலி பண்டாரம். சங்கிலி என்பது தமிழ்நாட்டில் உள்ள பெயர். இதன் தோற்றம் ஆராய்ச்சிக்குரியது. சங்கிலி பண்டாரம் என்பது ''சங்கமர் + ஆளி + பண்டாரம்'' என்பதன் திரிபு என்பர். ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத் தரசு விசயநகரப் பேரரசின் செல்வாக்கின் கீழ் வந்தது.

கி. பி. 1378இல் புக்கன், 1390இல் முதலாம் விருபாட்சன் ஆகியோர் இலங்கைமீது படையெடுத்து வந்தனர்.6 1399இல் இரண்டாம் அரிகரன் என்னும் விசயநகரப் பேரரசன் இலங்கையை வென்றான் என்பதை நெல்லூர்ப் பொறிப்பு வலியுறுத்தும். இவனுக்குப்பின் இரண்டாம் தேவராசன் (கி. பி. 1422 – 1446) இலங்கைமீது படையெடுத்தான். இவன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினான்.7 ஆகவே யாழ்ப்பாணத்தரசு விசயநகரப் பேரரசின் நேரடித் தாக்கத்துக்கு இலக்காகியது. அதுமட்டுமல்லாமல் அப்பேரரசின் கல்வி, பண்பாடு, வணிகம் ஆகிய செல்வாக்குகளால் கவரப்பட்டது என்பது தெளிவு.8 இக்காலத்தில் வீரசைவர் குழாம் ஒன்று இங்கு குடியேறியது. இது பண்டாரவாரியம் என்ற பெயர் பெற்றது. இக் குழுவினர் ''பண்டாரம் வாரியம்'' என அழைக்கப்பட்டனர். இப்பண்டாரவாரியத்தின் காவலன் யாழ்ப்பாணத்தரசன். ஆகவே இவனுக்குப் பண்டாரவாரியத் தலைவன் என்ற சிறப்புப் பெயர் சூட்டப்பட்டது. இதுவே பண்டாரம் எனக்குறுகியது. இதைப்பற்றி மேலும் ஆராய வேண்டும்.

சங்கிலி என்பது சங்கமர் + ஆளி என்பதன் திரிபு என்பர். வீர சைவரில் ஒருசாரார் சங்கமர். இச் சங்கமர் இங்கு பெரும் குழாமாகவந்து குடியேறியிருப்பர். இவர்களை மேற்பார்வை செய்து ஆவன புரிந்தவன் ''சங்கமர் ஆளி'' (ஆளி — ஆள்பவன்) என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருத்தலும் கூடும். சங்கமர் + ஆளி — சங்கமராளி. இதுவே காலகதியில் ''சங்காளி'', ''சங்கிலி'' எனத் திரிந்தது போலும். முதலாம் சங்கிலி என்னும் யாழ்ப்பாணத்தரசனுக்கு ''பறங்கி சனகோளரி'' என்ற சிறப்புப் பட்டம் வந்தது செவிவழிவந்த கதை என்பர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. – ''சங்கிலி' நாடகம் கட்டியம் – முதலாம் சங்கிலி அரசன் போத்துக்கேயரை யாழ்ப்பாணத்திலிருந்து படையெடுத்து மன்னாரில் வென்றதினால் இப்பட்டம் வந்தது என்பது பேராசிரியரின் கருத்து. (கோளரி — சிங்கம்)

## இந்தியாவில் வீரசைவம்:

இந்தியாவில் வீரசைவம் தோன்றி வளர்ந்ததை இனிக் கவனிக்கலாம். பெரியபுராணம் குறிப்பிடுகின்ற வீர நெறியை வீரசைவர் புதுப்பித்தனர் என்பதில் தவறு இல்லை. தமிழ்நாட்டிலிருந்தது சைவம். தம் புதுமையை உணர்த்தவே சைவத்துடன் வீரம் என்ற அடைமொழியையும் வீரசைவர் சேர்த்தனர். சைவத்திற்கும் வீரசைவத்திற்கும் அடிப்படை ஒற்றுமை பலவுண்டு. அதேபோன்று வேற்றுமையும் உண்டு. வீரசைவரின் வரலாற்றை நோக்கும்போது இரண்டைக் கவனிக்கவேண்டும்.

1. வீரசைவர் பற்றித் தொன்மங்கள் தரும் கதைகள்

2. வரலாற்று உணர்வுடன் எழுந்த ஆராய்ச்சி

முதலில் தொன்மங்களின் கதையை நோக்கலாம். சதாசிவனின் முகங்கள் ஐந்து. இந்த ஐந்து முகங்களில் இருந்து ஐந்து குரவர்கள் தோன்றினர். இவர்களின் பெயர் இரேணுகாச்சாரியார், தாருகாச்சாரியார், ஏகோராமராத்தியர், பண்டாதாராத்தியர், விசுவாராத்தியர். இவர்களே வீரசைவ நெறியை இந்தியாவில் பரப்பினர். இரேணுகாச்சாரியார் இராவணனுக்குச் சிவலிங்க வழிபாட்டை எடுத்துரைத்தார் என்பர். இராவணன் ஈழ வேந்தன் என்பர் ஒருசாரார். அப்படியானல் இலங்கையில் தொன்றுதொட்டுச் சிவவழிபாடு நிலவியது எனலாம். இன்றும் கிழக்கிலங்கையில் வாழும் வீரசைவர் பலர், தாம் இராவணனின் காலத்திலிருந்து சிவபூசகர்களாக இருந்துவருகின்ருேம் எனக்கூறிப் பெருமைப்படுவர். இது பற்றிய ஆராய்வு தேவை.

வரலாற்று அடிப்படையில் வீரசைவத்தின் தோற்றம், வளர்ச்சி, சிவலிங்க வழிபாடு என்பவைபற்றிக் கவனிக்கலாம். வீரசைவர் சிவலிங்கத்தைத் தமது கைத்தலத்தில் வைத்து வழிபடுவர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து

வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் காலத்தில் 41 சாதிகள் இருந்தன என ஒல்லாந்த ஆளுனர் தோமாசு வான்றீ குறிப்பிடுகின்றூர்.9 இந்தச் சாதிப்பிரிவில் பிரா மணர், தவசி என்போர் இடம்பெறுகின்றனர். தவசி என் போர் தமிழ்நாட்டில் தவசிப்பிள்ளே என அழைக்கப்பட் டனர். தவசிப்பிள்ளே என்பதன் பொருள் பூசைப் பணி யாள்.10 ''கோயிற்பிணுப்பிள்ளே'' என மணிவாசகர் தமது திருவெம்பாவைப் பாட்டிலே குறிப்பிடுவது இங்கு கவனிக் கப்படவேண்டியது. யாழ்ப்பாணத்தில் ''வீரமகேசுவரர்'' என்ற கூட்டத்தார் வாழ்ந்தனர் என்பதை ''வையா பாடல்'' மூலம் அறியலாம். இந்த நூலின்கண் ''செப் பரிய வீரமகேசுரர்'' என்ற குறிப்பு வருகின்றது.11 இவர் கள் வீரபத்திரரை வழிபடுவர். இன்றும் யாழ்ப்பாணத்துக் கட்டுவன், வீமன்காமம் போன்ற இடங்களில் உள்ள வீர பத்திரர் கோயில்களில் வீரசைவரே பூசகராக இருந்து பணிபுரிகின்றனர்.

## சிவலிங்க வழிபாடும் அதன் தொன்மையும்:

சிவலிங்க வழிபாடு இந்தியாவில் மிகவும் பழையகாலந் தொட்டு இருந்துவருகின்றது. சிந்துவெளிப் பண்பாட்டில் இவ்வழிபாடு முக்கிய இடம் பெற்றது. இதனைப் பேராசிரி யர் பேசாம் போன்றவர் நன்கு ஆராய்ந்துள்ளனர்.12 மேலைத்தேயப் புலவரின் ஆராய்ச்சி இந்தியாவில் ஆரியச் சார்பு இறுக்கமாகவுள்ள ஆராய்ச்சியாளரைப் பெரிதும் கவ லேக்குள்ளாக்கியுள்ளது. இந்த ஆரியக் கூட்டத்தாரின் கருத் துப்படி ''வேதத்திற்கு அப்பால் ஒன்றுமில்லை. வேதத்திற்கு இப்பாலும் ஒன்றுமில்லை. வேதத்திற்குப் புறம்பாக எப் பாலும் எதுவும் வரப்போவதில்லை. எல்லாம் வேதமயமே.'' எனவே இக்கூட்டத்தார் சிந்துவெளி நகர நாகரிகம் பண் டைய வேத நாகரிகம் என நிறுவ முயல்கின்றனர். சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட சிறிய சிவலிங்கங்களில் துவாரம் இருக்கின்றன. பண்டைய சிந்துவெளி மக்கள் சிவலிங்கங்களை அணிந்தனர் என்பது தெளிவு. ஆரியர்

இந்தியாவுக்கு வரமுன்னரே சிவலிங்க வழிபாடு இருந்து வந்துள்ளது. வடஇந்தியாவைப் பிடித்த ஆரியர் இவ் வழி பாட்டைத் தமதாக்கிக் கொண்டனர். பொதுவாக வர லாற்று உண்மை ஒன்று உண்டு. ஒரு நாட்டைப் பிடிப்ப வர் தாம் பிடித்த நாட்டிலுள்ள நல்ல பண்பாட்டுக்கூறு களைத் தமதாக்கிக்கொள்வர். வட இந்தியாவைப் பொறுத்த வரையில் ஆரியரும் இப்படியே செய்தனர் என்பது உண்மை. ஆனல் ஆரியச் சார்புடைய சிலர் சிவலிங்கமானது ஆண் பெண் உறவைக் குறிக்கின்ற குறி என்ற கருத்தையும் உரு வாக்கினர். அதுமட்டன்று, தமது மும்மூர்த்திகளையும் பண்டைய சிவலிங்கத்தில் அடக்கிவிட்டனர்; அடக்கிப் பெருமைகண்டனர்.

சிவலிங்கத்தின் அடிப்பாகம் — பிரமபாகம்
,, நடுப்பாகம் — விட்டுணுபாகம்
,, மேற்பாகம் — உருத்திரபாகம்

சிவனே உருத்திரன் என்ற கருத்தை வலியுறுத்தினர். இது உண்மைக்குப் புறம்பானது. தமிழ்நாடாம் தென்னுட்டிற் குரியவன் சிவன் என்பதில் கருத்து நிறைய உண்டு. சிவனை ஒத்த உருவ வழிபாடு, இடப வழிபாடு, மரவழிபாடு, தாய்மைக் கடவுள் வழிபாடு என்பன சிந்துவெளியில் இருந்தன என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது; ஆரியர் வரமுன்னரே இந்தப் பெரும் வழிபாடுகள் இந்தி யாவில் இருந்தன.

## தமிழ்நாட்டில் சிவவழிபாடு:

தமிழ்நாட்டில் சிவவழிபாடு தொன்றுதொட்டு நிலவி வந்துள்ளது. சங்க இலக்கியத்தில் "நீலமிடற் றொருவன்" "கறை மிடற்றண்ணல்" போன்ற பெயர்கள் இடம்பெறு கின்றன. இச்சிவவழிபாடு பண்டைய சேர, சோழ, பாண் டியர் காலத்திலும், பின்னர் பல்லவர் காலத்திலும் புதுப் பொலிவுபெற்றது. பிற்காலச் சோழர் ஆட்சியின்போது

இவ்வழிபாடு உச்சநிலையை அடைந்தது. கூத்தன், ஆடல் வல்லான் என்ற பெயர்கள் சிவனைக் குறிப்பன. இப் பெயர்கள் ''நடராசன்'' எனப் பின்னர் மாற்றம்பெற்றன. கூத்தக் கடவுளுக்குச் சிலை வடிக்கும் கலை தமிழ்நாட்டிற்கே உரிய தனிக் கலை.

தமிழ்நாட்டில் சிவலிங்கத்தின் தோற்றத்தைப் பற்றிக் கவனிக்கலாம். தமிழ்நாட்டில் நடுகல் வழிபாடு நிலவியது. வீரர்கள் போரிலே மடியும் போது அவர்களின் நினைவாக நடுகல் அமைத்து வழிபடும் முறைபற்றித் தொல்காப்பியம் கூறுகின்றது.13 அக்கல்லுக்கு வழிபாட்டின்போது உரிய முறைப்படி நீராட்டுவர். பின்னர் அக்கல்லில் வீரருக்குரிய பெயர் பொறிக்கப்படும். நடுகல்லுக்குக் குடமுழுக்குச் செய்யப்படும்போது அதன் அடிப்பாகத்தில் வட்டப்பாத்தி ஒன்று கட்டப்படும். இப்பாத்திமூலம் தண்ணீர் தங்கி வெளியேறும். அடிப்பாகத்தில் வட்டப்பாத்தி. அதன் நடுப்பாகத்தில் கோடாத நடுகல். இந்த அமைப்பு வீர வணக்கத்தின் சிறப்பான தன்மை. இதன் நினைவாகச் சிறிய வடிவில் உள்ள நடுகல்லை மக்கள் செய்து அணிந்தனர். இதுவே கைத்தல சிவலிங்கத்தின் தோற்றம் எனலாம். தமிழ்நாட்டு மதக்கோட்பாட்டிற்கு ஏற்பச் சிவலிங்கத்தை இரண்டு பாகமாகப் பிரிக்கலாம். ஒன்று அடிப்பாகம்; மற்றது மேற்பாகம். இந்த இரண்டு பாகங்களுக்கும் சைவ சித்தாந்த மெய்ப்பொருள் அடிப்படையிலும் விளக்கம் தரலாம்.

சிவலிங்கம் அடிப்பாகம் – இந்த மானிலத்தின் படைப்பு
சிவலிங்கம் மேற்பாகம் – கோடாமல் நிற்கும் செம்பொருள்; பரம்பொருள்; கடவுள். அதாவது சிவம்.

இதுபற்றி விரிவாக ஆராய அறிஞர் முன்வரல் வேண்டும்.

**புருவேசர்:**

சிவலிங்க வழிபாடு மிகவும் பழமை வாய்ந்தது. இதிலிருந்து கிளைவிட்டது வீரசைவம். வரலாற்று அடிப்படை

யில் நோக்கும்போது இன்றைய வீரசைவத்திற்குப் பொலிவும், வலிவும், வனப்பும் கொடுத்தவர் பசவேசர். பண்டைத் தமிழன் கண்ட வீரம் இரண்டுவகைப்படும். அவை யாவன:–

1. புலன் ஒடுக்கத்தால் அகத்தில் ஏற்படுகின்ற ஆண்மை

2. வாள் ஏந்தி அறம் நிலைநாட்டுகின்ற ஆண்மை

இந்த இரண்டுவகை ஆண்மையையும் பசவேசர் இணைத்தார். தமிழ்நாட்டில் நிலவிய சிவலிங்க வழிபாடும், ஆண்மையும் பசவேசரைக் கவர்ந்தன. புலன் ஒடுக்கத்தால் அகத்தில் ஏற்படுகின்ற ஆண்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் சங்ககால ஔவையார், கண்ணகி. இவரின் வீரம் புகழ்பெற்றது. இந்த ஆண்மையின் உச்சமாக அமைபவர் அப்பர் அடிகளார். பல்லவ அரசன் மகேந்திரனை "நாமார்க்கும் குடியல்லோம்'' என எதிர்த்து சைவக்கோட்பாட்டின் ஆண்மையை நிலைநாட்டினார் இப்பெருமகன். ஒரு பேரரசே இந்த ஆண்மைக்குத் தலைசாய்ந்தது. இப்படியே மணிவாசகர் தன் அகத்தூய்மையாம் ஆண்மையை நிலைநாட்டினார். இதனாலேதான் "வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்'' என அருளினார் மணிவாசகர். இக்கருத்திற்குப் பாண்டியப் பேரரசே தலைசாய்த்தது. இக்கருத்துக்களும், பெரியபுராணத்தில் இடம்பெறும் மெய்யடியார்களின் வாழ்க்கை வரலாறும் பசவேசரின் திருக்கூட்டத்தைக் கவர்ந்தன. வரலாற்று ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி பசவேசரின் காலம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| பசவேசரின் தோற்றம் | — கி. பி. 1105 |
| மெய்ப்பொருள் ஆய்வில் ஈடுபடுதல் | — கி. பி. 1142 |
| மேலைச்சாளுக்கிய மன்னன் தலைநகராம் கலியாணபுரிக்கு இடம்பெயர்தல் | — கி. பி. 1153 |

மறைவு — 1167
அவரின் 800 ஆவது ஆண்டு
நினைவு விழா — கி. பி. 1967

வீரசைவம் பரவுவதற்குரிய அரசியல், சமுதாய, பொருளாதார மதக் காரணங்களை நோக்கலாம். இசிலாமியரின் படையெடுப்பால் தென்னகம் பெரிதும் பாதிக்கப் பட்டது. இசிலாம் சமத்துவத்தைப் போதித்து மக்களைக் கவர்ந்தது; மதமாற்றம் செய்தது. இதனைத்தடுத்து நிறுத்த வீரசைவக் கோட்பாடு முயன்றது; முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றது; ஆகவே இந்த மதக்கோட்பாட்டைப் பரப்பியவர்களுக்கு விசயநகரப் பேரரசு ஆதரவைக் கொடுத்தது. தனது நகரம் வெற்றித் திருநகரமாகத் திகழவேண்டும் என்பதே விசயநகரப் பேரரசின் கோட்பாடு. இசிலாமியரின் ஊடுருவலைத் தடுப்பதே இப்பேரரசின் நோக்கம்; ஆகவே போர்முனையில் இசிலாமியரை வாள் ஏந்தி எதிர்க்கின்ற ஆண்மையும் தேவை; கோட்பாட்டு அடிப்படையில் இசிலாத்தை எதிர்க்கின்ற மெய்ப்பொருளுணர்வும் தேவை. வாள் ஏந்தும் ஆண்மை ஒருபுறம். திருநீறு ஏந்திச் சமுதாயக் களத்தில் காட்டவேண்டிய ஆண்மையையும் வீரசைவம் ஆதரித்தது. வர்ணச்சிர தர்மக் கோட்பாடு இந்து சமுதாயத்தைப் பிடித்து அழுத்துகின்ற பெருநோய்; ஆகவே சீர்திருத்தம் தேவை. சாதிவேற்றுமை இந்து சமுதாயத்தில் தோன்றியபின்னர், மதம் இழிநிலைக்கு வந்தது. இதிலிருந்து விடுதலை தேவை. இதனையே வீரசைவம் வேண்டி நின்றது. அத்துடன் ஆண், பெண் என்ற வேற்றுமையை வீரசைவம் வெறுத்தது. இருபாலாரும் சரியென்ற பெரியபுராணக் கோட்பாட்டையே வீரசைவம் வலியுறுத்தியது; ஆகவே பசவேசர் பால் வேற்றுமையை வெறுத்தார். தன் இயக்கத்தில் பெண்களையும் தாராளமாகச் சேர்த்தார். பெரியபுராணத்தில் இடம்பெறும் நாயன்மார்கள் குலம் கோத்திரத்திற்கு அப்பாற்பட்டவர்கள். நாயன்மார் வரிசையில் பார்ப்பனர்தொடக்கம் பறையர், வேடர்வரை இடம்பெறுவது பசவேசரைப் பெரிதும் கவர்ந்தது எனலாம். மேலும் மாக்

கதையில் திலகவதியார், காரைக்காலம்மையார், மங்கை யர்க்கரசியார் போன்ற பெண்கள் உயர்நிலையில் வைத்துப் போற்றப்படுகின்றனர். இது வீரசைவத் தலைவர்களைப் பெரிதும் ஊக்கப்படுத்தியது எனக்கொள்வது பொருத்தம். தமிழ்ச் சைவ சமுதாயத்தின் அன்றையநிலை அப்படி. பெண் அடிமைநிலை உருவாகாத காலம் அது. பார்ப்பனர் நடத்து கின்ற கிரியை முறைகள் மிகவும் சிக்கலானவை. அவர்களு டைய மதக்கோட்பாடுகளும் பெரும்மலைப்பை ஏற்படுத்து வன. ஆச்சாரியரின் வேதாகம வழிபாட்டிலும் பார்க்க உயர்ந்தது அன்புநெறி வழிபாடு. இதுதான் கண்ணப்பர் காட்டும் நெறி. கண்ணப்பர்போல அன்பு செலுத்த முடியவில்லை எனவும் மணிவாசகர் விதந்து உரைக்கின்றார். இதே கருத்தினால் கவரப்பட்ட ஆதிசங்கரர், கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பரைப் போற்றினார். நம்பி என்பதன் பொருள் தலைமகன். தில்லைமூவாயிரர் காட்டமுடியாத அன்புநெறியைச் சேரிவாழ் திருநாளைப்போவார் காட்டினார். நந்தன் காட்டியது அன்பு நெறி. சுருங்கச் சொன்னால் தமிழ்நாட்டில் நிலவிய அன்பு நெறி பசவேசரைப் பெரிதும் கவர்ந்தது. பின்னர் வந்த புராணகாரர் சேக்கிழார் பெருமான் காணாதனவற்றைக் கூறிச் சிக்கல்களை ஏற்படுத் தினர். கண்ணப்பர் பூர்வபுண்ணியம் திரண்டு பிறந்தநம்பி. இவரைப் புராணகாரர் வடநாட்டு அர்ச்சுனரின் அவதாரம் ஆக்கினர். இதைத் தமிழ்நாட்டவரை நம்பவைத்தனர்; ஆனால் நல்லகாலம். பெருமகன் நந்தனுக்கு முற்பிறப்பு உரைக்காமல் விட்டனர் ஆரியவழி நின்று புராணம் செய்ப வர். சைவமதக் கருத்தினால் கவரப்பட்ட பசவேசர், இல குவான, சமத்துவமான, சகோதரத்துவமான, சுதந்திர மான சமுதாயம் ஒன்றை அரச ஆதரவுடன் தோற்றுவிக்க விரும்பினார். அன்புநெறி நின்று புதுச் சமுதாயம் ஒன் றைக் காணத் துடித்தார். சேக்கிழார் போன்று பசவேசர் அமைச்சர் பதவியைத் தாங்கியவர். சேக்கிழாரும் அப்படி யானவர். ஒருசாரார் வறுமையில் வாட மற்றவர் மதத்தின் பெயரைச்சொல்லி உயர்நிலையில் வாழ்வதைப் பசவேசர் விரும்பவில்லை; பழைய சமுதாயத்தையும் பார்ப்பனரின்

கருத்தற்ற கட்டுப்பாடுகளையும் வெறுத்தார். இவரின் சீர் திருத்தக் கருத்துக்களை வெறுத்த சுயநலம் மிக்க பழமை வாதிகளான பார்ப்பனர் பசவேசரை வெறுத்தனர். தமது செல்வாக்கை பயன்படுத்தினர்; பசவேசரின் உயிருக்கே இவர்கள் உலைவைத்தனர் என்பது பழையகதை. அவரின் சீடர்களுக்குப் பெரும் துன்பங்களை விளைவித்தனர். அது மட்டன்று. தமிழ் நாட்டில் வீரசைவர் புரிந்த தொண்டு களையும் பின்னர் மறைத்தனர். கும்பகோணம், மதுரை, காஞ்சி, திருப்பரங்குன்றம், சென்னை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், கோவை, புதுவை போன்ற இடங்களில் வீர சைவம் ஆற்றிய பெருந்தொண்டை மறைத்துவிட முயலு கின்றனர். பொதுமக்கள் இதனை மறக்கவேண்டும் என்பதற் காக பொதுசன ஊடகங்கள் மூலமாக இன்று பிரச்சாரம் செய்கின்றனர். வீரசைவரான துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் செய்த பெரும்பணி இன்று மறைக்கப்படுகின் றது. ஆதிசங்கரரின் பணி போற்றப்படுகின்றது. வீர சைவத்திற்கு அன்றுதொடக்கம் இன்றுவரை உள்ள பார்ப் பன எதிர்ப்பையே இது காட்டுகின்றது. போதிய பிரச் சாரம் இல்லாதபடியால் பெரியபுராணம் காட்டும் பெரு நெறி இன்று மிகவும் நுட்பமாக மறைக்கப்படுகின்றது. திருமுறைகளுக்குப் பதிலாக சுப்பிரபாதம் ஒலிபரப்பாகும் காலம் இது. எவரும் விளங்கக்கூடியது திருமுறை. தமிழ் இசையாம் பண்ணைச்சுமந்தது திருமுறை; அன்பு நெறி யைப் போதிப்பது. இதற்குப் பதிலாக விளங்கமுடியாத மொழியில் உள்ள சுப்பிரபாத இராகப் பாடல்கள் சிறந் தன என்ற கருத்து உருவாகின்றது. அப்பாவிச் சைவர் இதனை அப்படியே விழுங்கி விடுகின்றனர். இந்தநிலை மாற வேண்டும்; மிகுவிரைவில் மாறவேண்டும்.

**வீரசைவம் காட்டும் வழி:**

வீரசைவருக்கு முப்பெரும் வழியுண்டு. அவையாவன : 1. ஐந்துவகை ஒழுக்கம் 2. எண்வகைக் காப்பு 3. ஆறு வகை இணைப்பு. இவற்றை இங்கு சுருக்கிநோக்கலாம்.

ஐவகை ஒழுக்கம் : பஞ்ச ஆசாரம்

1. இலிங்க ஒழுக்கம் — இலிங்காசாரம்
2. தனிநிறுத்தல் — சதாசாரம்
3. சிவநெறி நிற்றல் — சிவாசாரம்
4. தாழ்வெனும் சைவ ஒழுக்கம் — பிருத்தியாசாரம்
5. சைவக்குழு நெறி நிற்றல் — கணாசாரம்

எண்வகைக் காப்பு :

| | |
|---|---|
| 1. குரு | 5. உருத்திராக்கம் |
| 2. இலிங்கம் | 6. மந்திரம் |
| 3. சங்கமம் | 7. குருவின் திருவடி கழுவியநீர் |
| 4. திருநீறு | 8. பிரசாதம் |

அறுவகை இணைப்பு : சடுத்தலம்

| | |
|---|---|
| 1. மெய்யுணர்வு | : பக்தித்தலம் |
| 2. முயற்சி | : மகேசத்தலம் |
| 3. அறிவு | : பிரசாதித்தலம் |
| 4. இயற்கை உணர்வு | : பிராணலிங்கத் தலம் |
| 5. செயல் | : கரணத்தலம் |
| 6. ஒன்றுபடுதல் | : ஐக்கியத் தலம் |

இவற்றை நெறிதவறாது கடைப்பிடிப்பவன் வீரசைவன். சிவலிங்கத்தை இடையறாது வழிபடுபவன் வீரசைவன். தன் பாவங்களை எல்லாம் பொசுக்கவல்லது சிவலிங்கம் என்பது வீரசைவர்களின் நம்பிக்கை. இவற்றை இங்கு விரித்துக் கூறத் தேவையில்லை. இதுபற்றி நூல்கள் பலவும் இருக்கின்றன.14

## இலங்கையில் வீரசைவம்:

தொன்மங்களின்படி இலங்கையில் வீரசைவத்தை நிலை நாட்டியவன் ஈழவேந்தன் இராவணன். கிழக்கிலங்கையில் வாழும் வீரசைவர் தாம் இராவணன் காலம் தொட்டு இங்கு வாழ்வதாகக் கூறிப் பெருமைப்படுவர். கிழக்கிலங்

கையில் உள்ள கொக்கட்டிச்சோலை, வந்தாறுமூலை, களு வாஞ்சிக்குடி, பழுகாமம், அக்கரைப்பற்று போன்ற இடங் களில் வீரசைவர் வாழ்கின்றனர்; வாழ்ந்து வீரசைவ வளர்ச்சிக்குத் தொண்டு புரிகின்றனர். இங்குள்ள கோயில் களில் இவர்களே பூசாரிகள். வடஇலங்கையிலும், மேற் கிலங்கையிலும் உள்ள ஈசுவரங்களில் இருந்து வீரசைவர் சிவத்தொண்டு புரிந்துவந்துள்ளனர் என்பதில் தவறு இல்லை பின்னர் விசயநகரப் பேரரசின் காலத்தில் வீரசைவர். பெருமளவில் இலங்கைக்கு வந்தனர். மலையகத்து வீரசை வர் 19 ஆம் நூற்றுண்டில் வந்து சேர்ந்தனர். பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைக்கு ஆங்கிலேயர் கொண்டுவந்த தோட்டத் தொழிலாளிகளின் ஆன்ம ஈடேற்றத்தை இந்த வீரசைவர் கவனித்து வருகின்றனர்.

ஈழத்தில் தொன்றுதொட்டுச் சிவவழிபாடு நிலவிவந் துள்ளது. ஈழம் சிவபூமி என்பர் ஆன்றோர். இங்கு சிவ வழிபாடு, தாய்மைக்கடவுள் வழிபாடு, முருகவழிபாடு, பிள்ளையார் வழிபாடு, நெடுமால் வழிபாடு, வீரபத்திரர் வழிபாடு என்பன நிலவி வருகின்றன. ஆகவே சைவத்தில் இருந்து கிளைவிட்ட வீரசைவத்தை இங்கு வரவேற்றனர் எனக் கொள்ளலாம். மேலும் பிற்காலத்தில் வீரசைவத் திற்கு யாழ்ப்பாணத்தரசர் பெரும் ஆதரவைக் காட்டி வந்தனர் என்பது முன்னரே சுட்டிக் காட்டப்பட்டது. வீரசைவத்திற்கும் சைவத்திற்கும் வேற்றுமையிலும் பார்க்க ஒற்றுமையே அதிகம். இதுபற்றி விரிவாக ஆராயவேண் டும்.

## யாழ்ப்பாணத்து வீரசைவர்

வீரசைவப் பூசாரியாருக்குப் பொதுமக்களிடம் யாழ்ப் பாணத்தில் பெரும் ஆதரவு இருந்து வந்தது. இதனைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ள நாட்டார் பாடல் ஒன்றை இங்கு தரலாம்.

''வீரபத்திர னருள் கொண்ட
வீர சைவன் வாருனடி
விரைந்து சமையல் செய்யுமடி
தாராளமாய்ச் சம்பா ஆக்குமடி
காரசார மான ஆணம்*
தன்னை நன்ரு யாக்குமடி
வாடாத் தலைவாழை இலைபோட்டு
சோடாக அன்னம் வையுமடி
ஆறுமுகனுக்கு மூத்தவன்டி அவன்
வீர பத்திர சாமியடி
ஈராறு கையன் தமையனடி எங்கள்
வீர பத்திர சாமியடி
வீரசைவப் பூ சாரியடி
வெற்றி மிகவே வணங்குமடி
ஊரார் போற்றும் குரவனடி
உனக்கும் எனக்கும் நல்லவன்டி
அருளை மிகவும் தருவானடி இந்த
வீர சைவப் பூசாரியடி''

*ஆணம் : குழம்பு

இப்பாடல் ஒருபெண் தன் தோழியரை விழித்துப் பாடுகின்றதாக அமைந்துள்ளது. இதிலிருந்து உண்மை பலவும் விளங்குகின்றன. வீரபத்திரனின் அருள் கொண் டவன் வீரசைவப் பூசாரி. சிவன் மைந்தன் வீரபத்திரன். வீரசைவப் பூசாரியைக் கண்டதும் சமையல் செய்யும்படி ஒரு பெண் மற்றப் பெண்ணைக் கேட்கின்ருள். வீரசைவப் பூசாரி வீடுவீடாக வருவார். அன்புடன் சோறுபடைத் தால் வீட்டிலே இந்தப் பூசாரி மகேசுவர பூசையை நடத் துவார். இவருக்கு உணவு வழங்குவது பெரும் புண் ணியம். பார்ப்பனப் பூசகர், பார்ப்பனர் அல்லாதவரின் வீட்டில் உண்ணுர். இப்படி உண்பது துடக்கு, தீட்டு. ஆகவே பார்ப்பனர் பச்சைப்படியாக எல்லாவற்றையும் வாங்கிச் செல்வர். வீரசைவப் பூசாரிக்குச் சிறந்த சம்பா அரிசியைச் சமைக்கும்படி ஒரு பெண் தன் தோழியைக் கேட்கின்ருள். நல்ல சுவைமிக்க குழம்புக் கறியையும்

சமைக்கும்படி அவள் மேலும் கூறுகின்றாள். சோர்ந்து சுருளக்கூடிய குருத்து வாழையிலையை விடுத்து முற்றிய தலை வாழையிலையில் சோற்றைப் படைக்கவேண்டும். ஆறு முகக் கடவுளுக்கு மூத்தவன் வீரபத்திரன். பன்னிருகையன் கந்தனுக்கு மூத்தவன் வீரபத்திரன். வீரபத்திரனுக்கு அன்புப்பூசை செய்பவன் வீரசைவப் பூசாரி. ஆகவே ஊர் மக்கள் இந்த வீரசைவப் பூசாரியை வரவேற்கின்றனர். இந்தக்குருவை அன்புடன் வரவேற்றால் பெண்களுக்கு வேண்டியவை எல்லாம் கிடைக்கும்.

## யாழ்ப்பாணத்து வீரசைவரின் பணி:

யாழ்ப்பாணத்து வீரசைவர் ஆற்றுகின்ற மதப்பணி மிகவும் உன்னதமானது. அதனை விரித்துப் பார்க்கலாம்.

1. யாழ்ப்பாணத்துக் கிராமியக் கோயிலில் ஆற்றும்பணி
2. வேதாகமமுறைப்படி நடக்கின்ற கோயிலில் ஆற்றும்பணி
3. சோடனை, சப்பரம், காவடி ஆகியவற்றை அமைத்தல்
4. கலைப்பணி – கூத்து, கரகம், காவடி, பண்ணிசை, உடுக்குப்பாட்டு, இசைச்சொற்பொழிவு, போன்றவற்றை வளர்த்தல்.

இன்று வீரசைவர் யாழ்ப்பாணத்தின் அளவெட்டி, பண்ணாகம், தையிட்டி, கீரிமலை, பருத்தித்துறை, தீவுப் பகுதி, உரும்பராய், வண்ணார்பண்ணை, வட்டுக்கோட்டை போன்ற இடங்களில் வாழ்கின்றனர். இதுபற்றி விரிவான ஆய்வு தேவை. வீரசைவம் இன்று யாழ்ப்பாணத்தில் போதிய பிரச்சாரம் இல்லாதபடியால் மந்தநிலையில் இருக்கின்றது. வீரசைவம் உயர்ந்த ஒரு கோட்பாடு உடையது என்பதை இன்று மக்கள் மறந்து விட்டனர். வீரசைவர் குறிப்பிட்ட ஒரு சாதியினர் எனவே யாழ்ப்பாணம் இன்று கருதுகின்றது. யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற இறுக்கமான சாதிக் கட்டுப்பாடு அப்படியானது. வீரசைவ உண்மைகளைப் பரப்ப ஒரு நிறுவனம் இன்று இல்லை. இதனைவ்

வீரசைவரின் கோட்பாடு, மதத் தொண்டு, கலைத்தொண்டு எல்லாம் மறையும் நிலையில் இருக்கின்றன.

## கிராமியக் கோயிலில் ஆற்றும்பணி:

யாழ்ப்பாணத்துக் கிராமியக் கோயில்களில் வேதாகம விதிக்கட்டுப்பாடு, சாதிக்கட்டுப்பாடு, ஏழை செல்வர் என்ற வேற்றுமை அதிகம் இல்லை. கிராமத்து மக்கள் எல்லோரும் சமம் என்ற நிலையில் இருந்து வழிபடுவர். இதுபற்றி முன்னர் குறிப்பிடப்பட்ட யாழ்பாணத்துத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக் கட்டுரையில் கூறியுள்ளேன். இக்கோயில்களில் வீரசைவப் பூசாரிமார் ஆற்றிவருகின்ற தொண்டு அளப்பரியது. நித்தியபூசை, விளக்குவைத்தல், பொங்கல், மடை, குளிர்ச்சி, கஞ்சி வார்த்தல் ஆகியவற்றை வீரசைவப் பூசாரிமார் நின்று நடத்திவைப்பர். இவர்களின் பணியினலேயே சைவமதம், பொதுமக்களுடைய மதமாக, வாழும் மதமாக இன்று திகழ்கின்றது என்பது பொருத்தம். பார்ப்பனக் குருக்கள்மார் இத்தகைய வைபவங்களிற் கலந்து கொள்ளப் பெரும்பாலும் விரும்புவதில்லை. உயர்ந்தோரின் புரோகிதராகவே பார்ப்பனக் குருக்கள்மார் தம்மைக் கருதி வந்தனர். கிராமத்துக் கோயில்களில் நடைபெறும் கண்ணகி கதைப்பாட்டு, சித்திரபுத்திர நாயனர் கதைப்படிப்பு எல்லாவற்றையும் பூசாரிமாரே நின்று நடத்துவர். கிராமியக்கோயில்களிலேயே மதத்தொடர்புடைய கிராமியக் கலையாம் கரகம், காவடி, கூத்து, உடுக்குப்பாட்டு, இசைப் பாட்டுக் கதை என்பவற்றையும் பூசாரிமாரே நடத்துவர்; தாங்களும் இவற்றிலே பங்குகொள்வர். இக்கலைகள்மூலம் கிராமத்தில் அன்பு நெறியைப் பெரும்பாலும் வீரசைவர் வளர்த்துவந்தனர்.16 ''கல்வியின் நோக்கம் கடவுளை யடைதல்'', ''கலைகளின் நோக்கம் கடவுளைச் சேவித்தல்'' என்ற உயர்ந்த கோட்பாட்டிற்கு அமையவே யாழ்ப்பாணத்து வீரசைவப் பூசாரிமார் வாழ்ந்தனர். இவரிலே பலர் தமிழில், வைத்தியத்தில், சோதிடக் கலையில், மாந்திரிகத்தில் பாண்டித்தியம்பெற்றுத் தொண்டுபுரிந்து வந்

தனர். கிராமத்து மக்களின் இன்பம் துன்பம் எல்லாவற்றிலும் வீரசைவப் பூசாரிமார் கலந்துகொள்வர். பார்ப்பனப் பூசகர் அப்படிச் செய்வது மிகக் குறைவு. கிராமத்து மக்களுக்கு நோய்நொடி கண்டால், அதற்குரிய வழிபாட்டை வீரசைவப் பூசாரிமாரே நின்று நடத்துவர்; அம்மனை வேண்டிக் கரகம் எடுப்பர்; குளிர்ச்சி நடத்துவர்; உடுக்குப் பாட்டுமூலம் அம்மன் காவியம் படிப்பர்; வேப்பிலை பிடித்து நோயாளிக்குப் பார்வைபார்ப்பர்; நோயாளிக்குத் திருநீறுபோட்டு நூல்கட்டுவர். அத்துடன் இவர் நடத்துகின்ற கிரியைமுறை மிகவும் எளிமையானது; செலவு அதிகம் இல்லாதது. கொடுத்த தெட்சணையை இப் பூசாரிமார் அகம் மகிழ்ந்து வாங்குவர். வீரசைவப் பூசாரிமார், பார்ப்பனப் பூசகரைப்போலத் தீட்டு, துடக்கு, சாதிவிதிகளைக் கவனிப்பதில்லை. காரணம் உண்டு. இவர் தரித்திருக்கின்ற சிவலிங்கம் எல்லாக் குற்றங்களையும் நீக்க வல்லது. சுருங்கச்சொன்னல் வீரசைவப் பூசாரிமார் என்றுமே பொதுமக்களுடன் ஒட்டி உறவாடி இணைந்து பிணைந்து கலந்து வாழ்வார்.

## வேதாகமக் கோயிற்பணி:

யாழ்ப்பாணத்தில் வேதாகம முறைப்படி நடக்கின்ற கோயில்களிலும் வீரசைவர் எம்பெருமானின் பணிவிடைக்காரராக இருந்து நற்பணி செய்து வருகின்றனர். கோயில்களில் சங்குவாத்தியம் ஒலித்தல், மத்தளம் வாசித்தல், திருமுறை ஓதுதல் போன்ற பணியையும் செய்துவருகின்றனர். அத்துடன் திருப்பூந்தோட்டத்தைப் பார்த்தல், பூ எடுத்தல், மாலை பிணையல்கட்டுதல், சமித்துவகைகளைச் சேகரித்தல், சாத்துப்படிக்கு வேண்டியவற்றைச் செய்தல், சப்பரம், மஞ்சம், தண்டிகை, பூந்தொட்டி, திருத்தொங்கல் என்பவற்றைக் கட்டுதல் ஆகிய சிவப்பணிகளைச் செய்துவருகின்றனர். வீரசைவரின் திருத்தொண்டு இல்லாமல் வேதாகம முறைப்படி நடக்கின்ற கோயில்கள் இயங்கா என்று சொன்னல் அது ஒருபோதும் மிகையாகாது.

அலங்காரக் கலை;

கோயில்களில் வீரசைவர் செய்கின்ற அலங்காரக் கலைத்தொண்டு ஒருபுறம்; வீடுகளைக் கோயிலாக்கி நடத்து கின்ற எல்லாக் கிரியைகளுக்கும் வீரசைவரின் பணி தேவை. இவர்கள் இல்லாமல் வீட்டில் நடக்கின்ற இன்ப விழாக் களும், துன்பச் சடங்குகளும்சரி நடைபெறமாட்டா. முத லில் இன்பவிழாக்களைக் கவனிக்கலாம். திருமணவீட்டிற்கு வேண்டிய பந்தற்சோடனை, மணவறை, கழுத்துமாலை, சமித்துவகை எல்லாவற்றையும் வீரசைவரே வழங்குவர். பெண்ணின் பூப்புநீராட்டல்விழா, புதுமனைப் புகுவிழா விற்கு வேண்டிய மாலை சோடினை எல்லாவற்றையும் வீரசைவரே கொடுத்து உதவுவர். பொது விழாவிற்கு வைபவங்களுக்கு வேண்டிய சிகரம், சப்பரம் முதலியவற்றையும் வீரசைவக் கலைஞர்களே வைத்திருந்து வாடகைக்குக் கொடுப்பர். இரண்டாவதாக இறந்தோர்க்குரிய கிரியைகளுக்கும் வீர சைவரே சமித்து மாலை எல்லாம் கொடுத்து உதவுவர்.

கலைப்பணி:

மக்கள் கலைக்கு வீரசைவர் ஆற்றியுள்ள பெரும்பணி சொல்லில் அடங்காது. யாழ்ப்பாணத்தில் இன்று கூத்து, காவடி, கரகம், உடுக்குப் பாட்டு, பண்ணிசை, இசைச் சொற்பொழிவு போன்றவை வாழும் கலையாக, வளரும் கலையாக இருப்பதற்கு முக்கியமானவர் வீரசைவர் எனக் கூறுவதில் தவறு இல்லை. தித்தி, சங்கு, முகவீணை, புல் லாங்குழல், மிருதங்கம், கெஞ்சிரா, கடம் போன்றவற்றை வாசிப்பதிலும் வீரசைவக் கலைஞர் பெரும் தேர்ச்சிபெற் றிருந்தனர். சுருங்கச்சொன்னால் மக்கள் கலை யாவும் வீர சைவர் இரத்தத்திலே கலந்துவிட்டன. மக்கள் கலைக்கு மதக்கடமையும் உண்டு; சமுதாயக்கடமையும் உண்டு. இசைமூலம் கடவுளை வணங்கலாம்; பொதுமக்களை மகிழ் விக்கலாம். இவ்விரண்டு பணியையும் வீரசைவர் நன்கு செய்துவருகின்றனர். பொதுமக்களிடையே வீரசைவக்

கலைஞர்களுக்குப் பெரும் ஆதரவு இருந்து வந்துள்ளது. வீர சைவ ஓதுவார்களை அண்ணாவிமாரைப் பொதுமக்கள் ஆதரித்து வந்தனர். வீரசைவர் வளர்த்த மக்கள் கலைகள் இன்று கோயில்களுடன் மட்டும் நின்று விடவில்லை. பொது மக்களை மகிழ்விக்கின்ற கலைகளாகவும் இவை திகழ்கின்றன. இன்று இவை பொதுமேடைகளுக்கும் வந்துவிட்டன. பரத நாட்டியம் இன்று, தான்தோன்றிய கோயில்களில் இடம் பெறுவதில்லை. பொது மேடைகளில் இடம்பெறுகின்றது, ஆனல் மக்கள் கலைகள் இன்று கோயில்களிலும் பொது மேடைகளிலும் இடம்பெற்று வருகின்றன. வீரசைவரின் மக்கள் கலைகள் எம்நாட்டவரை மட்டுமன்றி பிறநாட்டவரையும் கவருகின்றன. ஓர் எடுத்துக்காட்டு. இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுவின் தலைவராகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் இருந்தார். இவர் ஒழுங்கு செய்த கலை விழாக்களில் அம்பலை சிவநாதக்கலைமணி சீ. சிதம்பரப்பிள்ளையின் குழுவினரின் கரகக்காவடி நிகழ்ச்சிகள் இடம்பெற்று வெளிநாட்டவரின் பாராட்டையும் பெற்றன. 1982 ஆம் ஆண்டிலே கொழும்பில் நடந்த அனைத்துலக இந்து மாநாட்டில் இதே குழுவினரின் கரகக் காவடி நிகழ்ச்சி இடம்பெற்றது; நடைபெற்று வெளிநாட்டவரின் பாராட்டைப் பெற்றது. இந்த நிகழ்ச்சியைத் ''தினபதி'' நாள்ஏடு பாராட்டியது.17

## கலையின் உயர்ந்த தரம்

வீரசைவர் வளர்த்த கலையின் தரம் எப்போதும் உயர்ந்ததாக இருக்கின்றது. இதற்குரிய காரணங்களை ஆராய்வது பொருத்தமான செயல்.

முதலாவதாக வீரசைவரின் சிவநம்பிக்கையைக் குறிப்பிட வேண்டும். ''எம்பெருமான் கையில் உடுக்கு. எமது கையிலும் உடுக்கு'' என்று அம்பலை சிவநாதக் கலைமணி சீ. சிதம்பரப்பிள்ளை சொல்லி மகிழ்வார். ''குரல் எழுப்பிக் குமரனைத் தொழுவேன்'' என்பார் இவர். ''அம்

பிகையைக் கைதொழுது அழகிய முருகனை நினைமனமே'' என்பர் அளவெட்டி மு. ஐயாத்துரை. காலம் மாறுகின்றது. வீரசைவரின் வாழ்க்கையும் மாறுகின்றது; ஆனால் இவர் சிவன்மேல் கொண்ட நம்பிக்கை குறைவதில்லை. இக்குலத்தவர் பலரும் இன்று படித்து நல்ல நிலையில் இருக்கின்றனர். எங்கிருந்தாலும் இக்குலத்தவர் சிவவழிபாடு செய்யத் தவறமாட்டார். இரண்டாவதாக இக்குலத்தவர் தம் கலைகளைக் கோயில்வளர்த்த கலையாகக் கூறிப் பெருமைகொள்வர். இப்படியான கோட்பாடு இவரின் கலை ஈடுபாட்டிற்குப் பெரும் வலுவைக் கொடுக்கின்றது. மூன்றுவதாக இக்கலைஞர் தம் வித்தையைக் குருகுல வித்தையாகப் போற்றிப் பேணி வருகின்றனர். வீரசைவக்கலைஞன் ஒருவன் இன்றும் காவடிக் கலையைப் பழைய மரபுப்படி நின்றே போற்றிப் பழக்குகின்றான். காவடிபழகும் ஒருவர் இன்றும் சலங்கை கட்டும் விழாவைப் பழைய முறைப்படியே நடத்துகின்றனர்.18 நான்காவதாகப் பொது மக்களின் பேராதரவு வீரசைவரின் கலைக்கு என்றுமே உண்டு. எமது மக்கள் வீரசைவக் கலைஞரை என்றுமே ஆதரித்து வந்துள்ளனர். மக்கள் இல்லாமற் கலைகள் இல்லை. இக்கலைஞருக்குப் பொதுமக்கள் பட்டம் வழங்கல், பொன்னுடை வழங்கல், பணமுடிப்பு வழங்கல் போன்ற பாராட்டு விழாக்களை எடுத்துத் தம் அன்பையும் ஆதரவையும் காட்டுவர்.19 ஐந்தாவதாக வீரசைவர் வளர்த்த மக்கள் கலைகள் யாவற்றையும் யாழ்ப்பாணத்துப் பெருமக்கள் பலரும் பாராட்டி வந்துள்ளனர்; உடுக்குப் பாட்டு, காவடிப் பாட்டு என்பவற்றை அன்று சேர். பொன்னம்பலம் இராமநாதன் போன்றோர் மணிக்கணக்காகக் கேட்டு மகிழ்வர். இதேபோன்ற ஆதரவைப் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை வழங்கிவந்தார். பாவலரின் இல்லம் கலைக்கூடமாகவே விளங்கியது. இது பற்றிய விபரம் பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றுண்டு விழா மலரில் அவரின் மகன் தர்மராசாவால் கொடுக்கப்பட்டுள்ளது 20. இன்னும் அரசியல் தலைவர் சு.நடேசபிள்ளை, கலையரசு சொர்ணலிங்கம், காணிநில அமைச்சின்

செயலாளர் ம. சிறிகாந்தா, பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை போன்றோர் வீரசைவக்கலைக்கும் பெரும் ஆதரவு வழங்கினர். யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மக்கள் கலை மறுமலர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. எடுத்துக் காட்டாக மட்டும் சிலரின் பெயர்களை இங்கு தந்துள்ளேன். வீரசைவக் கலைஞர்களின் பெயர்ப்பட்டியலைக் கிராம அடிப் படையில் ஆராய்ந்து தயாரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு உள்ளேன். இது பற்றி விரிவான ஆராய்ச்சி தேவை. இதனை ஏதாவது ஆராய்ச்சி நிறுவனம் ஏற்று நடத்தினால் நன்று இந்த நல்ல நாளை எதிர்பார்த்துள்ளேன்.

# ஆதார நூல்கள்


1. வீரசைவம் — கலைக்களஞ்சியம் தொகுதி 9 பக். 447
2. வீரகேசரி — ஞாயிறு பதிப்பு 10-10-1982
3. யாழ்ப்பாணத்து இசைவேளாளர் — த. சண்முகசுந்தரம்
4. கலையும் மரபும் — நேர்முகம் வீரசைவர் சிதம்பரப் பிள்ளை

   நேர்முகம் வீரசைவர் ஜயாத்துரை

   இசையும் மரபும் — நேர்முகம் வீரசைவர் செல்லையா
5. யாழ்ப்பாண வைபவமாலை — குல. சபாநாதன் பதிப்பு பக். 57

   சங்கிலி நாடகம் — பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை பக். 1
6. யாழ்ப்பாண வைபவமாலை — குல. சபாநாதன் பக். 81

   ,, ,, — ,, பக். 57
7. இலங்கை வரலாறு பகுதி II — இலங்கைப் பல்கலைக் கழக வெளியீடு பக். 386 – 388
8. Tamil Culture in Ceylon — M. D. Raghavan பக். 88
9. Memoirs of Thomas Van Rhee
10. சென்னைப் பேரகராதி — தொகுதி 3, பக். 1790
11. வையா பாடல் — செய்யுள் 65, பதிப்பு கலாநிதி க. செ. நடராசா
12. வியத்தகு இந்தியா — பாசாம் , பக். 28
13. தொல்காப்பியம் — காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் — 1006
14. கலைக்களஞ்சியம் — 'வீரசைவம்' குறிப்பு 1 இல் உள்ளது

    வீரசைவம் — வை. இரத்தினசபாபதி

    ஐயம்பிள்ளைக் குருக்கள் வைரவிழா மலர்

15. யாழ்ப்பாணத்துச் சைவக் கிராமிய வழிபாடு —
த. சண்முகசுந்தரம்

யாழ்ப்பாணத்து நான்காவது அனைத்துலகத் தமிழ்
ஆராய்ச்சி மாநாட்டுக் கட்டுரைத் தொகுதி

16. கலையும் மரபும் — த. சண்முகசுந்தரம் பக். 28
கலையும் மரபும் — த. சண்முகசுந்தரம் பக். 36
இசையும் மரபும் — த. சண்முகசுந்தரம் பக். 17

17. தினபதி — 27-4-82

18 மாவை முருகன் காவடிப் பாட்டு — பதிப்பு த. சண்முக
சுந்தரம்

19. கலையும் மரபும், இசையும் மரபும் நூல்களை நோக்குக

20 பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றுண்டு விழாமலர் —
பக்கம் 12

# இந்த நூலாசிரியர் எழுதிய ஏனைய நூல்

நாடகம்:

வாழ்வுபெற்ற வல்லி
இலங்கை சாகித்திய மண்டலப் பரிசுபெற்றது
பூதத்தம்பி
இறுதிமூச்சு

கலை:

கலையும் மரபும்
இசையும் மரபும்
யாழ்ப்பாணத்து இசைவேளாளர்

மக்கள் கலை:

மாவை முருகன் காவடிப்பாட்டு
மாருதப்புரவல்லி கப்பற்பாட்டு
குருநாதர் மான்மியம்
காகப்பிள்ளையார் மான்மியம்
வெற்றிலை மான்மியம்
வன்னிநாய்ச்சிமார் மான்மியம்
கண்ணகி அம்மன் கஞ்சிவார்ப்புத் தண்டற்பாட்டு
குருவிச்சி நாய்ச்சி சலிப்பு

நவீனம்:

மீனாட்சி

வாழ்க்கைவரலாறு:

கலையருவி கணபதிப்பிள்ளை
இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசுபெற்றது

---

மஹாத்மா அச்சகம், ஏழாலை.